1989 மே 11]

(ஐ) பல்கலைக் கழகங்கள் சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1989.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக் கழகங்கள் சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு *(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 22/1989) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்"

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதன் மீதான விவாதத்தினைத் தொடங்கி வைப்பவர் திரு. அ. லெ. சுப்பிரமணியன்.

* திரு. அ. லெ. சுப்பிரமணியன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தமிழ்நாடு யூனிவர் சிட்டீஸ் லாஸ் அமெண்ட்மெண்ட் பில்லை வரவேற்று நான் என்னுடைய கருத்தாகச் சிலவற்றைக் கூற விரும்புகிறேன். முன்பு இருந்த அரசு மதுரை பல்கலைக் கழகம், அண்ணாமலைப் பல்கலைக் கழகம் போன்ற பல்கலைக் கழகங்களில் செனேட், சிண்டிகேட், அக்காடமிக் கவுன்சில் போன்றவற்றில் ஒரு முறை மூன்றாண்டுகள் என்று இருந்தால் இரண்டு முறைதான் பதவி வகிக்கலாம், மூன்றாவது முறை பதவி வகிப்பதற்கு தடை இருக்கிறது, டிஸ்குவாலிபிகேஷன் இருக்கிறது என்று சொல்லி எல்லாப் பல்கலைக்கழகங்களுக்கும் பல சட்டங்களைக் கொண்டு வந்து நிறைவேற்றி இருந்தார்கள். அந்தக் தடையை, டிஸ்குவாலிபிகேஷனை நீக்குவதற்காக இன்றைக்கு இந்த மசோதாவைக் கொண்டு வந்த இந்த அரசாங்கத்தை நான் இந்த நேரத்திலே வாழ்த்தி வரவேற்கிறேன்.

ஒவ்வொரு சட்டமுன்வடிவு வருகின்ற போதும் அதிலே ஸ்டேட்மெண்ட் ஆப் ஆப்ஜெக்ட்ஸ் அண்டு ரீசன்ஸ் என்று கொடுப்பது வழக்கம். அந்தக் கருப்புச் சட்டத்திற்கு என்ன காரணம் கொடுத்தார்களோ தெரியவில்லை. ஆனால் உண்மையிலேயே காரணம் என்னவென்றால் அன்றைக்கு மதுரை பல்கலைக் கழகத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சொத்து பாதுகாப்பு உறுப்பினர் நண்பர் பழனிவேல்ராஜன் அவர்கள் செனேட்டுக்காக கிராஜுவேட் கான்ஸ்டிடியூயன்ஸியில் இருந்து போட்டியிட்டார்கள். அவர் வெற்றி பெறுவார்கள் என்று தெரிந்தவுடன் ஓட்டு முடிந்த அன்று, மறுநாள் ஓட்டுப் பதிவை எண்ண வேண்டும்— அன்று ஓட்டு பதிவு முடிந்ததற்குப்

* 5—5—1989 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

[திரு. அ. லெ. சுப்பிரமணியன்] [1989 மே 11

பிறகு ஒரு அவசரச் சட்டத்தின் மூலமாக, ஆர்டினஸ் மூலமாக அதை தடை செய்து அப்போது அவர் வெற்றிபெற முடியாமல் செய்தார்கள். நீதிமன்றத்திற்கு எல்லாம் கூட அவர் போனார், தனிநபர் மசோதா என்று இங்கே சொல்கிறோம். ஆனால் அந்தச் சட்டம் ஒரு தனிநபருக்காக கொண்டு வந்தது போல், ஒரு இயக்கம், அதாவது திராவிட முன்னேற்றக் கழகம் இப்படிப்பட்ட பல்கலைக் கழகங்களில் இடம் பெறக் கூடாது என்று ஒரு நோக்கத்தோடு முன்பு அந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அது இன்று முதல் எடுப்பதற்காக இந்த மசோதா தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

இன்றைக்கு சட்டமன்ற உறுப்பினர்களாக நாம் இருக்கிறோம். எத்தனை முறை வேண்டுமானாலும் இருக்கலாம். இரண்டு முறைதான் என்று இதிலே கட்டுப்பாடு இல்லை. அப்படி இருந்தால் தலைவர் அவர்களே உங்களுடைய தலைமையில் அன்றைக்கு பொன் விழா கொண்டாடுகிறபோது மூத்த உறுப்பினர்களுக்கு, 5 முறை 6 முறை வெற்றி பெற்ற நம்முடைய முதலமைச்சர் போன்றவர்களுக்கு, நாம் பாராட்டே நடத்தியிருக்க முடியாது. சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அந்த விதி இல்லை. அதைப் போல ஒன்றியத் தலைவர்கள், நகராட்சித் தலைவர்கள் போன்ற பதவிகளுக்கு இரண்டு முறைக்கு மேல் இருக்கக்கூடாது என்ற அந்த டிஸ்குவாலிபிகேஷன் இல்லை. அப்படி இருக்கின்றபோது பல்கலைக் கழகத்திற்கு மட்டும் இருப்பது பொருத்தமற்றது என்ற முறையில் இந்த அரசு அதை எடுத்திருக்கிறது. அதோடு மட்டும் அல்லாமல் அப்படி மூன்றாவது முறை, நான்காவது முறை அவர்கள் தேர்ந்தெடுக்கப் படுகிறபோது பல்கலைக் கழகங்களுக்கு அவர்களுடைய அறிவாற்றலும் அனுபவமும் மிகவும் உதவியாக இருக்கும். அந்த அளவில் கொண்டு வரப்பட்ட இந்தச் சட்டத்தை நான் வரவேற்று வாழ்த்தி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

* **பேராசிரியர் க. பொன்னுசாமி** : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பல்கலைக் கழக சட்ட திருத்தத்தில் ஒரு சில வற்றை இங்கே எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் வரவேற்றுப் பேசினார்கள். அனைத்தையுமே வரவேற்றுப் பேசினார்கள். அதற்கு காரணங்களையும் சொன்னார்கள். அவர்கள் சொன்னதிலே இரண்டுக்கு மேற்பட்ட முறை கல்வியாளர்களை தேர்ந்தெடுக்கும்போது, அவர்களுடைய அறிவாற்றலும், அனுபவமும் பல்கலைக் கழகத்திற்கு மிக அதிக அளவிலே பயன்படும் என்பதால் இது வரவேண்டும் என்று சொன்னார். இந்தக் கருத்தை நாங்கள் வரவேற்கிறோம். அதே நேரத்தில் இந்த அனுபவமும், அறிவாற்றலும் எல்லா இடங்களிலும் பயன்படவேண்டும் என்பதால் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தன்னுடைய கருத்தை

வலியுறுத்த கடமைப்பட்டிருக்கிறது. இந்த அனுபவம், ஆற்றல் என்று பார்க்கின்ற போது அண்மையிலே இங்கே நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியை நான் குறிப்பிட விரும்புகின்றேன். அண்மையில் சென்னைப் பல்கலைக் கழகத்தில் பதிவாளர் அவர்கள் அவசர அவசரமாக மாற்றப்பட்டு அதற்குப் பதிலாக ஒரு ஐ. ஏ. எஸ். அதிகாரி அவர்கள் அங்கே நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்தப்பதிவாளர் மீது குற்றங்கள் இருந்தால் அந்தக் குற்றங்களின் அடிப்படையிலே நடவடிக்கை எடுப்பதாக இருந்தால் அதிலே குறுக்கிட நான் தயாராக இல்லை. அது தனிப்பட்ட விஷயம். ஆனால்....

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: தலைவர் அவர்களே, பல்கலைக் கழகத் துணை வேந்தர் அல்ல, ஆனால் பதிவாளருடைய நடவடிக்கை குறித்து பல புகார்கள் கடந்த ஓராண்டுக் காலமாக வந்துள்ளது. ஆளுநர் மூலமாகவும் அந்தப் புகார்கள் செயலாளருக்கு கிடைத்தும் உள்ளது. நான் அமைச்சராக வந்ததற்குப் பின்னர் எனக்கும் கிடைத்தது. அந்தப் புகார்கள் குறித்து ஒரு முறைக்கு இரு முறை பல்வேறு வகையில் விசாரித்துப் பார்த்து அந்தப் புகார்களுக்கு அந்தப் பொறுப்பிலே இருக்கின்றவரிடமிருந்து முழு உண்மை வெளி வராது என்று முடிவாக கருதி அதற்குப் பின்னால் பல்கலைக் கழக ஆட்சிக் குழுவிலே தீர்மானம் கொண்டுவரப்பட்டு பெரும்பாலோர் ஏற்றுக்கொண்டு ஒரு விசாரணை நடத்த வேண்டுமானால் பல்கலைக் கழகத்திலே, நிர்வாகத்திலே தொடர்புடையவர்களே இருந்தால் அந்த விசாரணை நிறைவடையாது என்ற எண்ணத்தில் பதிவாளராக ஐ. ஏ. எஸ். அதிகாரியை நியமித்து துணை வேந்தருடைய பொறுப்பில் பதிவாளர் அந்த விசாரணையை நடத்துவதற்கு உறுதுணையாக இருக்க வேண்டிய நிலைமை இப்போது ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இதைக்கூட செய்யாவிட்டால் எந்தக் குறையையும் அரசாங்கம் போக்க முடியாது என்பதை மாண்புமிகு உறுப்பினர் உணர்வார், உணர்ந்து கொள்வார் என்று எதிர்பார்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேராசிரியர் அவர்களுடைய விளக்கத்தை பேராசிரியர் ஏற்று திருத்தத்திற்கு முன்வரலாம்.

பேராசிரியர் க. பொன்னுசாமி: தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் அவர்கள் இங்கே சொன்னதிலே எனக்கு உடன்பாடு உண்டு. எந்தத் தவறுக்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கருத்துக்கு மாற்று கருத்

இருக்க முடியாது. ஆனால் அந்தப் பதிவாளர் நீக்கப்படுவதிலே அல்லது நீக்கப்பட்டதற்காக யாரும் இங்கே வலிந்து அவருக்காக உதவிக்கு வரவில்லை. நான் சொல்ல வந்ததெல்லாம்....

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, பதிவாளர் கூட நீக்கப்படலாம். ஆனால் அப்படி நீக்கப்படவில்லை. அதற்கு மாறாக அவர் எந்தப் பதவியில் இருந்தாரோ அதற்கு இணையான ஊதியமும் பதவித் தகுதியும் உள்ள இன்னொரு இடத்திலே அமர்த்தப்பட்டு இருக்கிறார். விசாரணை முடிந்ததற்குப் பின்னால்தான் அதுபற்றிய— அவரை நீக்குவதா, தொடர்ந்து நீடிப்பதா என்பது விசாரணையினுடைய விளைவாக எடுக்கவேண்டிய முடிவாகும்.

பேராசிரியர் க. பொன்னுசாமி : தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுக்கு நன்றி. இங்கே நான் சொல்ல வந்ததெல்லாம் ஒருவர் மீது நடவடிக்கை எடுப்பது என்றால், அவர் அந்தப் பதவியிலிருந்து விடுவிக்கப்படும்போது அவருக்கு இணையான கல்வியாளர் ஒருவர் அங்கே நியமிக்கப் பட்டு இருக்க வேண்டும். அதுதான் மரபு என்பதைப் பற்றித்தான் நான் சொல்லவந்தேனே தவிர....

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, விசாரணை நடத்துவதற்கு கல்வியாளர்கள் தான் தகுதி என்று சொன்னால், காவல்துறை எல்லாம் பேராசிரியர்கள் தாம் இருந்து நடத்த வேண்டும். எனவே இப்போது விசாரணை தான் மிக முக்கியம். எனவே நிர்வாக முறையிலே யார் விசாரணையைத் தடம்புரளாமல் நடத்துவதற்கு உறுதுணையாக இருக்க முடியுமோ அப்படிப்பட்ட அதிகாரியைத் தான் நியமிக்க வேண்டிய ஒரு கட்டாயமான நிலைமை பல்கலைக் கழக ஆட்சிக் குழுவிற்கு ஏற்பட்டிருக்கிறது.

(பிற்பகல் 5—30)

பேராசிரியர் க. பொன்னுசாமி : தலைவர் அவர்களே, இதே நடைமுறை எல்லாத் துறைகளுக்கும் வருமா என்ற சந்தேகம் எழுந்தாலும் கூட நான் சொல்ல வந்த விஷயம் அங்கே ஒரு ஐ. ஏ. எஸ். அதிகாரி போடப்பட்டிருக்கும்போது இந்த நிலைமை எல்லா பல்கலைக் கழகங்களுக்கும் தொடர்ந்து விடுமோ என்ற அச்சம் கல்வியாளர்கள் மத்தியிலே இப்போது இருக்கிறது. அது மட்டுமல்ல. அங்கே நான் கேள்விப்பட்டதைச் சொல்கிறேன். அங்கே நடைபெற்ற அந்தக் கூட்டத்தில்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதுபற்றிக் கல்வி அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லிவிட்டார்கள். இப்போது இது தொடர்பான திருத்தம் மட்டும்.

பேராசிரியர் க. பொன்னுசாமி : என்னுடைய கவலை எல்லாம் 'அகடமிஷியன்ஸ்' என்று சொல்கின்ற அந்தக் கல்வி யாளர்கள் பாதிப்பிற்குள்ளாகக்கூடாது என்ற அந்தக் கருத்தின் அடிப்படையிலேயும், அவர்கள் புறக்கணிக்கப்படக் கூடாது என்ற.....

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, 'அகடமிக்' என்று சொல்லப்படுகிற தகுதியுடன் உள்ள பேராசிரியர்களோ, நிபுணர்களோ தவறு செய்கிற நிலைமைக்கு ஆளாகக்கூடாது. அவர்கள் தவறு செய்வார்களேயானால் விசாரணையை நடத்தவேண்டிய முறைப் படிதான் நடத்தவேண்டுமே தவிர, அகடமிக் பீப்பிள் என்பதற்காக அவர்களைக் கொண்டே அவர்கள் விசாரிக்கப்பட வேண்டும் என்ற முறை அவ்வளவு சிறப்பு அல்ல. அதனால் ஏற்பட்ட குறைகள் பல என்பது கல்வித்துறையைப் பற்றி ஓரளவு அறிந்திருக்கிற எனக்கு மிக நன்றாகத் தெரியும்.

பேராசிரியர் க. பொன்னுசாமி : நன்றி, ஆகவே, அப்படிப் பட்ட சூழ்நிலைகள் வருகிற போது கல்வியாளர்கள் புறக் கணிக்கப்படாமல் இருக்கவேண்டும் என்ற என்னுடைய கோரிக் கையை இங்கே சொல்லிக்கொண்டு, இன்னும் ஒன்றே ஒன்றை மட்டும் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஒரு சில வட இந்திய பல்கலைக்கழகங்களில் பதிவாளர் பதவியை 'ப்யூர்லி அட்மினிஸ்ட்ரேடிவ்' என்று நிர்வாகத்திற்காகவும், 'அகடமிக் சைட்' கல்வித் துறைக்கு தனியாக 'ப்ரோவைஸ்—சான்ஸலர்' என்ற ஒரு பதவியையும் தனியாக உருவாக்கி அவர்கள் அங்கே செயல்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலை களை வேண்டுமானாலும் இங்கே உருவாக்கிக் கொள்ளலாம். தவறு செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதிலே எங்களுக்கு கருத்துவேறுபாடு இல்லை. சரியான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். கல்வி களத்திலே பாதிப்புகள் இருக்கக்கூடாது என்பதிலே உள்ளபடியே எங்களுக்கும் அதிலே நல்ல கருத்துக்கள் இருக்கின்றன என்பதைச் சொல்லி, வாய்ப்பிற்கு நன்றி சொல்லி அமைகிறேன், நன்றி.

திரு. எம். அப்துல் லத்தீப் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திருத்தச் சட்டத்தினுடைய மையக் கருத்தை நான் ஆதரிக்கிறேன். பொதுவாக பல்கலைக்கழகங்கள்—முழுமையாக பல்கலைக்கழகத்தை நடத்துவதோடு மட்டுமல்லாமல், அதற்கு

அதனுடைய அதிகாரத்திற்குட்பட்ட கல்லூரிகளைச் செம்மையாக நடத்துவதற்கான பொறுப்பிலேயும் பல்கலைக்கழகம் இருத்தப்பட்டிருக்கிறது. எனவே, பல்கலைக்கழகத்தில் அனுபவம் உள்ளவர்கள், அதே நேரத்தில் கல்வித்துறையில் தொடர்புள்ளவர்கள், அதிகமாக பல்கலைக்கழகத்தினுடைய பேரவையிலேயும், அதனுடைய நிர்வாகக் குழுவிலேயும் இடம் பெறுவதை மையமாகக் கொண்டு இந்தத் திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டு இருக்கிறது. அந்த அடிப்படையில் இது எல்லோராலும் ஆதரிக்கப்படக்கூடிய ஒன்று என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். கல்வித் துறையிலே குறிப்பாக தூய்மை இருக்கவேண்டும் என்று எல்லோரும் எதிர்பார்ப்பது நியாயத்தின்பாற்பட்டதாக இருக்கும் என்றே நான் கருதுகிறேன்.

எனவே, அவையிலே இன்றைக்கு பல்கலைக்கழகத்தினுடைய பதிவாளரைக் குறித்துக் கூட சில பிரச்சினைகள் எழுந்தன. குறிப்பாக, நம்முடைய சென்னைப் பல்கலைக் கழகத்தைக் குறித்து, அதனுடைய நிதி நிர்வாகம் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டதாக இல்லை என்ற அளவிற்கு சில குற்றச் சாட்டுக்கள் இன்றைக்கு வெளிப்படையாகப் பேசப்படுகின்றன. குறிப்பாக, தனியார் கல்லூரிகள் பல்கலைக்கழகத்தில் தங்களுடைய நிதிநிலை செம்மையாக இருக்கிறது என்பதை அடிப்படையாக, பல்கலைக்கழகத்திற்கு உத்தரவாதமாகத் தரவேண்டும் என்ற அடிப்படையில்தான் 'ஃபிக்சட் டெபாசிட்' என்ற முறையே இன்றைக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஒரு காலத்திலே இந்த எண்டோமெண்ட் என்று சொல்லக்கூடிய அறக்கட்டளைகள் எல்லாம் அசையாப் பொருட்களாக, பி டிங்குகளாக, கட்டிடங்களாகவே காட்டினால் அதை பல்கலைக்கழகம் ஏற்றுக் கொண்டு வந்தது. ஆனால் பிறகு அது மாற்றப்பட்டு, 'கேஷ் என்டோமெண்ட்' என்ற முறையிலே என்டோமெண்ட்டுகளை ஏற்படுத்த வேண்டும் என்ற முறை வந்த பிறகு, அந்த முறையைப் பயன்படுத்தி பல்கலைக்கழகத்தில் குறிப்பிட்ட தனியார் அறக்கட்டளைகளினுடைய பெயரிலேயும், பல்கலைக்கழகத்தினுடைய பதிவாளர்களுடைய பெயரிலேயும் கூட்டாக வைக்கப்படுகிற கணக்குகளிலே கூட அந்த 'ஃபிக்சட் டெபாசிட்டுகள்' 'மெச்சூர்' ஆகும்போது அதை மறுபடியும் ஏற்படுத்தாமல் அந்தப் பணத்தை வேறு கணக்குகளுக்கு மாற்றக்கூடிய, அது மட்டுமல்லாமல் எந்தக் காரணத்தை......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தாங்கள் உரையாற்றுவது இந்தத் திருத்தத்தோடு தொடர்புடையதுதானா? (குறுக்கீடு) தாங்கள் சிறந்த கல்விமான். (குறுக்கீடு)

1989 மே 11]

திரு. எம். அப்துல் லத்தீப் : எனவே, நம்முடைய சென்னைப் பல்கலைக்கழகத்தைக் குறித்து கூட இத்தகைய புகார்கள் இப்போது நிறைய வந்திருக்கின்றன. நான் குறிப்பாகச் சொல்லவேண்டுமென்று சொன்னால், ஏறக்குறைய ஒவ்வொரு பகுதியிலேயும் 20 இலட்சம், 25 இலட்சம் ரூபாய் என்ற அளவிற்கு பல்கலைக்கழக தனியார் அறக்கட்டளைக் கூட்டுக்கணக்கிலே இருந்து தனியார் கணக்குக்கே மாற்றப்பட்டிருக்கிறது. அதற்கு பல்கலைக்கழக நிர்வாகிகளே உறுதுணையாக இருந்து இருக்கிறார்கள் என்று சொல்லப்படுவது எல்லோருக்கும் வேதனை உண்டாக்கக்கூடிய ஒன்று என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதே நேரத்திலே பேரவைக் கூட்டங்கள் நடைபெறுவது—இன்றைக்கு பேரவைக் கூட்டங்கள் 2 தடவை இல்லை, அதற்கு ஒரு வரையறை கூடாது என்ற அளவுக்கு இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஆனால் பேரவைக் கூட்டங்கள் 6 மாதத்திற்கு ஒரு தடவைகூட நடைபெறுவது இல்லை. பல்கலைக்கழகத்தினுடைய நிர்வாகத் தொடர்பான விஷயங்கள் எல்லாம் பேரவையிலே இடம் பெற்று இருக்கின்ற உறுப்பினர்களுக்கு கூட தெரியாத அளவுக்கு ஏதோ சாஸ்திர சம்பிரதாயத்திற்கு ஒரு கூட்டம் நடத்துவது என்ற முறையில் நடந்து கொண்டிருப்பது ஏற்புடையது அல்ல. எனவே அடிக்கடி பேரவைக் கூட்டங்கள் நடப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும் அளவுக்கு நிர்வாக முறைகள் மாற்றி அமைக்கப்படவேண்டும். பேரவையிலே இடம் பெற்று இருக்கும் உறுப்பினர்களுக்குக்கூட கல்வியிலே என்ன கொள்கை, அடிப்படையான கொள்கை என்ன செய்யப்பட்டு இருக்கிறது? என்ன மாறுதல்களை எந்த அடிப்படையிலே பல்கலைக்கழகம் ஏற்றுக்கொண்டிருக்கிறது. அதிலே நடைமுறைப்படுத்தும் போது சில குறைபாடுகள், கல்லூரிகளுக்கு தனி அந்தஸ்து 'அட்டானமஸ் ஸ்டேடஸ்' என்று எல்லாம் கொடுக்கப்படுகிறது. இவைகள் எல்லாம் எந்த அடிப்படையில் கொடுக்கப்படுகின்றன? பல்கலைக்கழகத்தினுடைய வருமானம் என்ன? அதை எப்படி செலவழிக்கிறார்கள்? அது மட்டும் அல்லாமல் பேரவையிலே இடம் பெற்றிருக்கிற உறுப்பினர்களுக்கு கூட பல்கலைக்கழகத்தினுடைய நிதி நிர்வாக சம்பந்தமான உள்ளார்ந்த விஷயங்கள் தெரிவிக்கப்படுவது இல்லை. சிண்டிகேட் உறுப்பினர்களுக்குக்கூட அது முறையாகத் தெரிவிக்கப்படுவது இல்லை என்ற அடிப்படையில் நடப்பது ஏற்புடையது அல்ல. எனவே கூட்டங்களை அடிக்கடி நடத்த வேண்டும். உறுப்பினர்களுக்கு தேவைப்படும் குறிப்புகளை பல்கலைக்கழகம் அனுப்பவேண்டும். இந்தக் குறைகள் களையப்படும் வகையில் ஒரு வரைமுறை ஏற்படுத்தினால் அது ஏற்புடையதாக இருக்கும் என்ற அளவுக்கு நான் இந்த மசோதாவை ஆதரித்து அமர்கிறேன்.

திரு. செ. நூர்முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத் திருத்தத்திற்கான நோக்க காரண விளக்க உரையில் ஏற்கெனவே அனுபவம் செறிந்தவர்கள் இந்த அவையிலே இருக்கவேண்டும் என்ற நோக்கத்தோடு கொண்டு வரப்படுவதாகக் கூறப்பட்டிருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட ஒரு நோக்கத்தோடு கொண்டு வருகிற இந்த நேரத்தில் அந்தத் தேர்தல்கள் எல்லாம் எல்லா பல்கலைக்கழகங்களிலும் முறையாக நடத்தப்பட்டு, ஜனநாயகப் பூர்வமாக அப்படிப்பட்ட ஆட்சி மன்றக் குழுக்கள் ஆனாலும் சரி, அது போன்ற மற்ற குழுக்கள் ஆனாலும் சரி, அவை அமைக்கப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். இதிலே நான் ஒரு கருத்தை மிகவும் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். சிண்டிகேட், செனட் போன்ற அமைப்புகளில் கட்டாயமாக மாணவர்களின் பிரதிநிதித்துவம் இருக்கவேண்டும். மாணவர்கள் மத்தியில் தேர்தல்கள் நடத்தி அவர்களின் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்ட சிண்டிகேட், செனட் உறுப்பினர்கள் ஆகின்ற பழக்கம் கேரள பல்கலைக் கழகம் மற்றும் உள்ள வேறு பல்கலைக்கழகங்களில் இருந்து வருகிறது. இதனால் எந்தவிதமான தவறும் எந்த இடத்திலும் ஏற்பட்டுவிடவில்லை. ஆகவே, கல்வியோடு சம்பந்தப்பட்ட வர்கள் அந்த நிகழ்ச்சிகளிலும், அவற்றை நடைமுறைப்படுத்து கின்ற இடத்திலும் அமருவது என்பது கட்டாய பூர்வமாக இருக்க வேண்டும் என்ற வகையில் அரசு இதைப் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் ஒரு முக்கியமான விஷயம். பல்கலைக்கழகங்களில் நடைபெறுகிற ஊழல்கள் பற்றிய சில விஷயங்கள் ஏற்கெனவே சொல்லப்பட்டிருக்கின்றன. நான் அதன் விவரத்திற்குள் செல்ல விரும்பவில்லை. இருந்தாலும் சென்னைப் பல்கலைக்கழகத்தில் அரசு எடுத்து இருக்கின்ற நடவடிக்கை என்பது சரியான ஒரு நடவடிக்கை. எதிர்காலத்திலாவது கல்வி சம்பந்தமாக நடை பெறுகின்ற இப்படிப்பட்ட அமைப்புகள்தான் ஒழுக்கத்தை உருவாக்குகின்ற கூடங்கள். ஆகவே, ஒழுக்கத்தை உருவாக்கு கின்ற கல்விக் கூடங்களில் பல்கலைக்கழகங்களில் இப்படிப் பட்ட முறைகேடுகள், ஊழல்கள் நடக்காமல் இருப்பதற்கு இப்படிப்பட்ட உறுதியான நடவடிக்கைகளை எடுத்து எத்தகைய தரப்பிலிருந்து எப்படிப்பட்ட கேள்விகள் வந்தாலும்கூட அதில் எல்லாம் தயக்கம் காட்டாமல் அரசு நடந்து கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதுபோல பாரதிதாசன் பல்கலைக்கழகம். அங்கே ஒரு பிரச்சினை கூறப்பட்டது (மணி யடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது தொடர்பாக மட்டும் பேசுங்கள்.

திரு. செ. நூர்முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தமாதிரி பல்வேறு பல்கலைக்கழகங்களில் இருக்கின்ற பிரச்சினைகள் சம்பந்தமாகவும், இந்த ஆட்சி மன்ற குழுக்கள் அல்லது செனட், சிண்டிகேட் இவைகளில் அந்த விவரங்கள் பேசப்பட்டு முறையான வகையில் அவைகளுக்கு பரிகாரம் காணப்படுகிறதா என்பதையும் அரசு சற்று கவனத்தோடு உன்னிப்பாகக் கண்காணிக்கவேண்டும் என்று இந்த நேரத்தில் கூறிக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று இந்த அவையிலே விவாதிக்கப்பட்டுள்ள பல்கலைக்கழக சட்டங்களில் கொண்டு வரப்பட்டு இருக்கின்ற இந்தத் திருத்தங்கள், ஏற்கெனவே பல்கலைக்கழக சட்டங்களில் இடையிலே புகுந்த முறை கேடான, தவறான, குறுகிய நோக்கத்தோடு கூடிய, சட்டத் திருத்தங்களை செயலற்றதாக மாற்றுவதற்குத்தான் இந்தத் திருத்தங்கள் இன்றையதினம் கொண்டுவரப்பட்டு இருக்கின்றன.

(பிற்பகல் 5-40)

ஏற்கெனவே அப்படி கொண்டுவரப்பட்டபோது, எல்லா பல்கலைக்கழகங்களும் அப்படிப்பட்ட ஒரு திருத்தத்தால் பாதிக்கப்பட்டன. சென்னைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், மதுரை—காமராஜர் பல்கலைக் கழகம், அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக்கழகம், பாரதியார் பல்கலைக்கழகம், பாரதிதாசன் பல்கலைக்கழகம், அண்மையில் தோன்றிய அன்னை தெரசா பல்கலைக்கழகம், அழகப்பா பல்கலைக்கழகம், தமிழ்ப் பல்கலைக்கழகம் ஆகியவை பாதிக்கப்பட்டன. பல்கலைக்கழகங்களில் பயிற்சியுள்ளவர்கள் தொடர்ந்து அனுபவம் பெற்றவர்கள், தொடர்ந்து இடம் பெறக் கூடாது என்பது அன்றைய திருத்தத்தினுடைய நோக்கம். இரண்டு முறை, டூ பீரியட்ஸ், மூன்று, மூன்று ஆண்டுகளாக இரண்டு முறை அல்லது 3 ஆண்டுக்காலம் பதவி வகிக்கக்கூடிய அந்த காலக் கட்டத்தில் இடையிலே வருகிற ஒரு தேர்தலில் ஓராண்டு அந்த அமைப்பில் இடம் பெற்றாலும்கூட, அதுவும் மூன்று ஆண்டாகக் கருதப்பட்டு தடை விதிக்கப்பட்டது. 6 ஆண்டுக்காலம் செனட்டிலோ, சிண்டிகேட்டிலோ, அகடமிக் கவுன்சிலிலோ இந்த மூன்றிலே எந்த அவையிலே இடம் பெற்றிருந்தாலும்கூடப் பின்னர் அவற்றுள் எந்த அவைக்கும் அப்படி முன்னர் இடம் பெற்றவர்கள் வரக்கூடாது. அது பல்கலைக்கழக நிர்வாகத்தைப் பெருமளவுக்குப் பாதிக்கக்கூடிய ஒன்று. யாரோ ஒருவர் இருவர் இடத்திலே அன்றைய அரசுக்கு ஏற்பட்ட மாறுபட்ட உணர்ச்சி காரணமாகக் கொண்டு வந்த இந்தச் சட்டத்

திருத்தம், ஏற்கெனவே வந்த சட்டத் திருத்தம்—பல்கலைக் கழக நடைமுறைகளைத் தெரிந்த ஒருவர் இருவர் கூடத் தொடர்ந்து ஆறு ஆண்டுகட்கு மேல் 10 ஆண்டு, 20 ஆண்டு நீடித்திருப்பது தடுக்கப்பட்டது. படித்த பட்டதாரிகளாக உள்ள, பேராசிரியர்களாக உள்ள, அவர்களுடைய ஆதரவில், வாக்கினால், அவர்களுடைய ஓட்டுக்களைப்பெற்று வருவதுகூடத் தடுக்கப்பட்டு விட்டது. ஜனநாயகத்திலே படித்தவர்களுக் கிடையிலேகூட இருக்கவேண்டிய ஜனநாயக உரிமைக்கே ஒரு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. அது பல்கலைக்கழக நிர்வாகத் திலே பல குறைபாடுகள் ஏற்படுவதற்கு இடமாயிற்று. அதைக் கண் காணிக்கக்கூடியவர்கள் அல்லது ஓரளவு தகுதி உடையவர்கள் அந்த இடங்களில் அமர முடியாத நிலைமை காரணமாக அரசாங்கமே தலையிட்டு எதை வேண்டுமானாலும் செய்யலாம் என்னும் நிலைமை ஏற்பட்டுள்ளது. நான் நினைத்தால், இந்தத்துறை அமைச்சராக இருக்கிற காரணத்தால் நினைத்ததைக் செய்யக் கூடிய அளவுக்கு ஒரு சூழ்நிலையைப் பல்கலைக்கழகத்திலே உருவாக்கிவிட்டார்கள். எனவேதான் அப்படி அனுபவம் பெற்ற வர்கள் வருவதைத் தடுப்பதற்குக் கொண்டு வந்த சட்டத் திருத்தம் பல்கலைக்கழகம் சீராக இயங்கத் தடையாகும் வாக்காளர்களாக இருக்கிற, ஆசிரியர்களாலேயோ அல்லது பட்டதாரித் தொகுதியிலே உள்ளவர்களாலேயோ தேர்ந் தெடுக்கப்படும் உரிமையைத் தடுப்பதற்காக வந்த சட்ட விதிகள் மட்டும்தான் இப்போது நீக்கப்படுகிறது. 'டிஸ்— குவாலிபிகேஷன்' என்று சொல்லப்படுகிற முறையில் அவர்களுக்கு ஏற்படுத்தப் பட்ட தடை நீக்கப்படுகிறது. அது தவிர பல்கலைக்கழகங்களைப் பற்றிய பல்வேறு கருத்துக்கள் இங்கே பேசப்பட்டன. எதிர்க் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்னுசாமி அவர்களும் மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்களும் இங்கே எடுத்துச்சொன்ன அந்தக் கருத்துக்களையொட்டி பல்கலைக்கழகச் சட்டங்களை மறுபடியும் ஒரு முறை மொத்த மாக திருத்தி அமைக்கக்கூடிய ஒரு ஆலோசனை இன்றையதினம் இருப்பதால் அப்போது கருதப்படும் பல்கலைக்கழகங்களிலே 'அக்கடமிக் பீப்பிள்' பேராசிரியர்களாக 20, 22 ஆண்டுக் காலம் பணியாற்றியவர்கள் பதிவாளர்களாக வருவது என்ற ஒரு முறை இடைக்காலத்திலே ஏற்பட்டு இருக்கிறது. பதிவாளர் பொறுப்பு என்பது பெரும்பாலும் நிர்வாகப் பொறுப்புதான். நிர்வாகப் பொறுப்புக்கு தகுதியுள்ள அக்கடமிக் பீப்பிளை கொண்டு வருவதன் மூலமாக அவர்கள் பல்கலைக்கழக நிர்வாகத்திலே தங்களுடைய நோக்கத்திற்கேற்ப முயற்சிக்கிற காரணத்தால் சில இடையூறுகள், சில குறைபாடுகள் ஏற்படு கின்றன. எனவே எதிர்காலத்திலே பல்கலைக்கழகங்களுக்கான சட்டத்தை எல்லா பல்கலைக்கழகத்திற்கும் பொதுவாக ஒரே வடிவமாகச் செய்ய முடியுமா என்ற ஒரு ஆலோசனை இருக்கிறது. அப்படிச் செய்யப்படுகிறபொழுது திரு. லத்தீப்

அவர்கள் சொன்னதைப்போல ஆளும் குழு அல்லது ஆட்சி மன்றக் குழு அதைப்போல செனட் அக்கடமிக் கவுன்சில் இந்த அமைப்புகளுக்கு முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்கள், சிறப்பாகப் பணியாற்றுவதற்கு என்னென்ன விதி முறைகள் தேவையென்பதும் சேர்த்து ஆய்வு செய்யப்படும். மற்ற ஆலோசனைகளைப்பற்றி நான் இப்போது பதில் சொல்வது அவ்வளவு அவசியம் இல்லையென்று கருதுகிறேன். எனவே, இன்றைக்கு இந்தச் சட்டம் பல்கலைக்கழகங்களுடைய நடைமுறையில் அதை ஒரு வகையில் செயலற்றதாக ஆக்குவதற்கு காரணமாக இருந்த இடையூறாக இடைக் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட திருத்தங்களை நீக்கி செம்மைப்படுத்துகிற முறையிலே கொண்டு வரப்பட்ட திருத்தங்கள் என்ற காரணத்தால் அத்தனை பல்கலைக்கழகங்களுக்கும் சேர்த்து கொண்டுவரப் பட்டிருக்கிற திருத்தத்தை இந்த அவையிலே உள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி.

''1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் சட்டங்கள் (திருத்த) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 22/1989) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, சட்ட முன் வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 32 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்;

''1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக் கழகங்கள் சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 22/1989) நிறைவேற்றப் பெறவேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.